සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**GIT 01 I**

## பொதுத் தகவல் தொழினுட்பவியல் பரீட்சை, 2008
## General Information Technology Examination, 2008

**பொதுத் தகவல் தொழினுட்பவியல் I** | **ஒரு மணித்தியாலம்**

கவனிக்க :

- ✻ எல்லா வினாக்களுக்கும் தரப்பட்டுள்ள விடைத்தாளில் விடை எழுதுக.
- ✻ உமது **சுட்டெண்ணை** விடைத்தாளில் குறிக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.
- ✻ அவ்விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாகப் பின்பற்றுக.
- ✻ **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **(1), (2), (3), (4)** என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்து, அதனை விடைத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்பக் குறிக்க.

---

1. 67 எனும் தசம எண்ணுக்குச் சமவலுவான துவித எண் எது ?
   (1) 1100001 (2) 1000011 (3) 1010001 (4) 1000101

2. 11011101010 எனும் துவித எண்ணுக்குச் சமவலுவான பதின் அறும (hexadecimal) எண் எது ?
   (1) 6EA (2) DD2 (3) 3352 (4) 6722


3. எண்ம இலக்கத் தொகுதியின் அடி யாது ?
   (1) 6 (2) 8 (3) 10 (4) 16

4. 1010 மற்றும் 11 ஆகிய துவித எண்களிரண்டினதும் கூட்டுத்தொகை யாது ?
   (1) 1110 (2) 1011 (3) 1010 (4) 1101

5. $A + (\overline{A}.B)$ எனும் தருக்கக் கோவை பின்வரும் எதற்குச் சமவலுவாகும் ?
   (1) $A$ (2) $B$ (3) $A + B$ (4) $A.B$

6. உள்ளீடுகள் இரண்டும் ஒன்றையொன்று இடைநிரப்பும் (complement)போது பெறுமானம் 1 ஐ வருவிளைவாகத் தரும் தருக்கச் செயலைத் தெரிவு செய்க.
   (1) NOR (2) NAND (3) XOR (4) XNOR

7. வருவிளைவு *1* ஆவதற்கு A, B உள்ளீடுகளுக்கு வழங்க வேண்டிய பெறுமானங்களைக் காண்க.




   (1) 0 உம் 0 உம் (2) 0 உம் 1 உம் (3) 1 உம் 0 உம் (4) 1 உம் 1 உம்

8. UNICODE குறியீட்டு முறையினால் பயன்படுத்தப்படும் பிட் (bit) எண்ணிக்கை யாது ?
   (1) 7 (2) 8 (3) 9 (4) 16

9. முறைமை அபிவிருத்தி ஆயுள் வட்டத்தில் (SDLC) முதலாவது கட்டநிலையின் செயல் யாது ?
   (1) முறைமை திட்டமிடல் (System Design) (2) முறைமை பகுப்பாய்வு (System Analysis)
   (3) முறைமை பராமரிப்பு (System Maintenance) (4) முறைமை சோதித்தல் (System Testing)

[பக். 2 ஐப் பார்க்க

10. பின்வரும் கூற்றுகளுள் **தவறானது** எது ?
    (1) மேல்மட்ட முகாமையாளருக்கு விரகு சார்ந்த (Strategic) தீர்மானமெடுப்பதற்குத் தகவல்கள் தேவை
    (2) இடைமட்ட முகாமையாளருக்கு வணிக நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கும் மேர்பார்வை செய்வதற்கும் தகவல் தேவை
    (3) செய்பணி தொடர்பான தகவல்கள் கீழ்மட்ட முகாமையாளருக்கே பெரிதும் தேவை
    (4) புத்திசாலித்தனமாகத் தீர்மானமெடுப்பதற்குத் (Intelligent Decisions) தேவையான தரவுகளின் அடிப்படையான இயல்பு, தரவுகளின் கனவளவு (Volume) ஆகும்.

11. பின்வருவனவற்றுள் கொடுக்கல் வாங்கல் முறைவழியாக்கத்தின் (Transaction Processing) அடிப்படையான படிமுறை **அல்லாதது** எது ?
    (1) தரவுக்கவர்வு (Data Capture)
    (2) தரவு செல்லுபடியாக்கம் (Data Validation)
    (3) தரவு முறைவழியாக்கம் (Data Processing)
    (4) கட்டமைக்கப்படாத தரவு பயன்படுத்தல்

12. பின்வருவனவற்றுள் தீர்மானமெடுக்கும் மட்டம் **அல்லாதது** எது ?
    (1) விரகு சார்ந்த (Strategic)
    (2) உத்தி சார்ந்த (Tactical)
    (3) செய்பணி சார்ந்த (Operational)
    (4) புத்திசாலித்தனமான (Intelligent)

13. பின்வருவனவற்றுள் முறைமை அபிவிருத்தியின்போது ஏற்படத்தக்க ஒரு பிரச்சினை **அல்லாதது** எது ?
    (1) செலவையும் நேரத்தையும் உத்தேசமாக மதிப்பிடல்
    (2) பயனரின் தேவைகளைக் கவர்தல்
    (3) செய்நிரல் குறிமுறையாக்கம்
    (4) இறுதி உற்பத்திப் பொருளைச் சந்தைப்படுத்தல்

14. முறைமைகளைச் சோதித்தல் தொடர்பான **தவறான** கூற்று எது ?
    (1) அது தர உறுதியீட்டுச் செயன்முறையின் ஓர் அம்சமாகும்.
    (2) அது முறைமை திட்டமிடலுடன் இணையாக விருத்திசெய்யப்படுவதாகும்.
    (3) ஒவ்வொரு மொடியுலாகச் சோதித்தல் முறைமை சோதிப்பின் அடிப்படையான அம்சமாகும்.
    (4) முறைமைப் பராமரிப்பு வலயத்தினுள்ளேயே சோதிப்பு நடத்தப்படும்.

15. கணினியொன்றினை ஒரு முறைமையாகக் கருதுங்கள். பின்வரும் கூற்றுகளுள் சரியான கூற்று எது ?
    (1) பயனர், முறைமை உள்ளீட்டின் ஓர் அம்சமாவார்.
    (2) பயனர், முறைமைச் சூழலின் (Environment) ஓர் அம்சமாவார்.
    (3) துலங்கல் நேரம், முறைமையின் ஒரு பின்னூட்டல் (Feed back) ஆக இருக்கலாம்.
    (4) மென்பொருள்கள், முறைமையினது சூழலின் ஓர் அம்சமாகும்.

16. பின்வருவனவற்றுள் கணினி முறைமையொன்றின் அடிப்படையான கூறு **அல்லாதது** எது ?
    (1) மைய முறைவழி அலகு (CPU)
    (2) உள்ளீட்டு அலகு (input unit)
    (3) வருவிளைவு அலகு (output unit)
    (4) வலையமைப்பாக்க அலகு (Net working unit)

17. பின்வருவனவற்றுள் கணினிப் பணியியல் முறைமையொன்றின் பிரதானமான செயற்கூறு எது ?
    (1) நினைவக முகாமை (Memory Management)
    (2) வரைவியல் பதிப்பாக்கம் (Graphic Editing)
    (3) இசை பதிவு செய்தல் (Music Recording)
    (4) வலைமேலோடல் (Web Browsing)

18. பக்கமொன்றின் திசைமுகத்தை (Orientation) மாற்றுவதால் பயனருக்கு
    (1) பக்கமொன்றின் ஓரத்தை (Margin) மாற்றலாம்.
    (2) தாளின் அளவை (Size of the paper) மாற்றலாம்.
    (3) கிடையாக அல்லது நீளப்பாடாகப் பாட உள்ளடக்கத் திசையை (Text Direction) மாற்றலாம்.
    (4) Landscape அல்லது Portrait ஆக பக்கத்தின் திசையை அமைக்கலாம்.

19. சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட ஒரு பந்தியின் இரண்டு வரிகளுக்கு இடையேயுள்ள தூரத்தை எவ்வாறு மாற்றியமைக்கலாம் ?
    (1) பக்கத்தின் ஓரங்களை அமைப்பதால்
    (2) வரி ஒரு சீர்ப்படுத்துவதால் (line justification)
    (3) வரி வெளியே அமைப்பதால் (line spacing)
    (4) பந்தி வெளியை அமைப்பதால் (paragraph spacing)

20. http://www.schoolnet.lk என்பது பின்வரும் எதற்கு உதாரணமாகும் ?
    (1) பாடசாலையொன்றின் மின்னஞ்சல் முகவரி
    (2) யுனிஃபோம் ரிசோஸ் லொக்கேற்றர் (URL)
    (3) மேலோடி (Browser) முகவரி
    (4) பாடசாலை வலையமைப்பொன்றின் IP முகவரி

[பக். 3 ஐப் பார்க்க

21. வேலைத்தாளொன்றில் உள்ள சூத்திரமொன்றை எண்கள் மற்றும் பாடங்களில் (texts) இருந்து வேறாக்கி இனங்காண்பதற்காகப் பயன்படுத்த வேண்டிய உரு (character) யாது ?
(1) சமன் அடையாளம் (=) (2) வினா அடையாளம் (?)
(3) இரட்டை மேற்கோள் (") (4) ஒற்றை மேற்கோள் (')

22. வேலைத்தாளொன்றில் C 8 சிற்றறையில் (cell) (A1–B1)/C1+A1 என்னும் சூத்திரம் சேமிக்கப்பட்டுள்ளது. பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பெறுமானங்கள் A1, B1, C1 கலங்களில் உள்ளனவாயின் C 8 இல் தோன்றும் பெறுமானம் யாது ?

| கலம் | பெறுமானம் |
|---|---|
| A1 | 20 |
| B1 | 10 |
| C1 | 5 |

(1) 0.4 (2) 22 (3) 26 (4) 38

23. தரவுத் தளமொன்றின் (Database) ரெக்கோர்ட் (Record) எனப்படுவது
(1) கோப்புகள் (Files) ஆகும். (2) களங்கள் (Fields) ஆகும்.
(3) தளக்கோலங்கள் (Layouts) ஆகும். (4) அட்டவணைகள் (Tables) ஆகும்.

24. வேலைத்தாளொன்றின் தனி முகவரியொன்று
(1) A1 ஆகும். (2) $A$1 ஆகும். (3) 150 ஆகும். (4) இவற்றுள் எதுவுமல்ல.

25. பஸ்கல் செய்நிரலினது உடலின் (Body) உள்ளே உள்ள காற்புள்ளி
(1) கூற்றுக்கள் இரண்டை வேறாக்கும்.
(2) செய்நிரலொன்றின் முடிவைக் குறிக்கும்.
(3) கூற்றுக்கள் இரண்டை வேறாக்குவதோடு செய்நிரலின் முடிவையும் காட்டும்.
(4) மேற்படி எதனையும் செய்வதில்லை.

26. பஸ்கலில் வலிதற்ற வகை இனங்காணி (type identifier) **அல்லாதது** பின்வருவனவற்றுள் எது ?
(1) integer (2) real (3) character (4) boolean

27. 3.1415926 எனும் பெறுமானத்தைக் கொண்ட *PI* எனும் மாறிலியை வரையறுக்கும் சரியான மாறிலி விளக்கத்தை தெரிவு செய்க.
(1) type *PI* = 3.1415926; (2) real *PI* = 3.1415926;
(3) const *PI* = 3.1415926; (4) var *PI* = 3.1415926;

28. பாஸ்கலில் வலிதற்ற செயலி (Operator) எது ?
(1) := (2) =< (3) <> (4) not

29. Integer வகையைச் சேர்ந்த 20 உறுப்புக்களைக் கொண்ட HEIGHT எனும் array வகையை விளக்கும் சரியான வகை வரைவிலக்கணம் எது ?
(1) type *HEIGHT* = array(1..20) of integer;
(2) type *HEIGHT* := array(1..20) of integer;
(3) type *HEIGHT* = array[1..20] of integer;
(4) type *HEIGHT* := array[1..20] of integer;

30. P எனும் மாறியின் அடிப்படையான பெறுமானம் 2 ஆயின், பின்வரும் தடத்தை (loop) செயற்படுத்திய பின்னர் P மாறியின் பெறுமானம் யாது ?

```
for count := 1 to 4 do P := P * count ;
```

(1) 1 (2) 10 (3) 24 (4) 48

[பக். 4 ஐப் பார்க்க

31. $X$ எனும் மாறி 10 இலும் மேற்பட்டதாக அல்லது அதற்குச் சமமானதாகவும் 20 இற்குக் குறைவானதாகவும் இருப்பின் "Within the range" எனும் பாட இழைகள் (Text String) சரியாகக் காட்டும் பஸ்கல் கூற்று யாது ?
   (1) if ($X$ >= 10) AND ($X$ < 20) then write ("Within the range");
   (2) if ($X$ >= 10) AND ($X$ < 20) then write ('Within the range');
   (3) if (10 <= $X$ < 20) then write ("Within the range");
   (4) if (10 <= $X$ < 20) then write ('Within the range');

32. செய்நிரலொன்றின் ஒரு தொகுதிக் கூற்றுகளை 10 தடவைகள் மீளச் செயற்படுத்த வேண்டியுள்ளது. பின்வரும் பஸ்கல் கூற்று வகைகளுள் இப்பணிக்கு மிகவும் பொருத்தமான கூற்றைத் தெரிவு செய்க.
   (1) for-statement.  (2) while-statement.
   (3) repeat-statement.  (4) if-statement.

33. வகை integer ஆகிய X மாறிக்கு பெறுமானமொன்றைச் சரியாக ஒப்படைக்கும் ஒப்படைப்புக் கூற்றைத் (assingment statement) தெரிவு செய்க.
   (1) X := 0;  (2) X := 'a';  (3) X := '0';  (4) X = 0;

34. முன்வைப்புக்களுக்காக (Presentations) இலவசமாகப் பெறத்தக்க மென்பொருள் பின்வருவனவற்றுள் ஏது ?
   (1) Microsoft Office PowerPoint
   (2) OpenOffice.Org Impress
   (3) Adobe Flash
   (4) Apple Keynote

35. இணையத்தின் ஊடாக பகுதி வலையமைப்புகளுக்கு (LAN) அனுமதியின்றி நுழைவதைத் தவிர்ப்பதற்குப் பொருத்தமானது பின்வருவனவற்றுள் எது ?
   (1) வைரஸ் ஸ்கானர் (Virus Scanner)  (2) டிஸ்க் டிபிராக்மன்டர் (Disk defragmenter)
   (3) ஃபயர்வோல் (Firewall)  (4) டுரோஜன் ஹோஸ் (Trojan Horse)

36. பின்வரும் சேமிப்பு ஊடகங்களுள் மிகப் பெரிய சேமிப்புக் கொள்ளளவைக் கொண்டது எது ?
   (1) DVD  (2) CD
   (3) நெகிழ் வட்டு (Floppy Disk)  (4) வன்வட்டு (Hard Disk)

37. கணினி முறைமையொன்றை அச்சுப் பொறியுடன் இணைப்பதற்காகப் பயன்படுத்த **முடியாத** குதை (port) பின்வருவனவற்றுள் எது ?
   (1) PS2  (2) தொடரான (Serial)  (3) USB  (4) சமாந்தரமான (Parallel)

38. வீட்டுக் கணினியினால் இணையத்தை மேலோடுவதற்காக (browse) பின்வருவனவற்றுள் எது தேவைப்பட மாட்டாது ?
   (1) வலையமைப்பு அச்சுப்பொறி (Network Printer)  (2) வைரஸ் பாதுகாப்பு (Virus Guard)
   (3) வெப் புரவ்சர் (Web browser)  (4) ஃபயர்வோல் (Firewall)

39. கணனி வலையமைப்பொன்றின் கட்டாயமான அடிப்படையான ஒரு கூறு **அல்லாதது** பின்வருவனவற்றுள் எது ?
   (1) மோடெம் ரவுட்டர் போன்ற தரவுத் தொடர்பாடல் கணினி சுற்றயல் சாதனங்கள்
   (2) இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட கணினிகள்
   (3) செப்புக்கம்பி வடங்கள் போன்ற தரவுத் தொடர்பாடல் ஊடகம்
   (4) மின்னஞ்சல் (e-mail) தொடர்பாடலுக்குத் தேவையான மென்பொருள்

40. மின் நல்லாட்சி (e-governance) தொடர்பான பின்வரும் கூற்றுகளுள் **உண்மையல்லாதது** எது ?
   (1) அது, அரச சேவைகளை மேம்படுத்துவதற்காகச் செயற்படுகிறது.
   (2) அது, அரச தகவல்களை பொதுமக்கள் பெறுவதை இலகுபடுத்துகிறது.
   (3) அது, மக்களுக்கு நீண்ட தூரம் பயணம் செய்யாமலேயே அரச சேவைகளைப் பெற உதவுகிறது.
   (4) அது, அரசு தனது தேசிய வரவு செலவை ஈடுசெய்வதற்கு நிதி சேகரிக்கும் ஒரு முறையாகும்.

* *

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**GIT | 01 | II**

# பொதுத் தகவல் தொழினுட்பவியல் பரீட்சை, 2008
# General Information Technology Examination, 2008

**பொதுத் தகவல் தொழினுட்பவியல் II** — **இரண்டு மணித்தியாலம்**

✻ நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

1. (a) 4FDA எனும் பதின் அறும (hexadecimal) எண்ணுக்குரிய சமவலு எண்மத்தைக் (octal) காண்க.

(b) (i) பின்வரும் உண்மை அட்டவணையைப் பயன்படுத்தி A, B, C ஆகிய மூன்று உள்ளீடுகளின் மூலம் X எனும் வருவிளைவுக்கான பூலியன் கோவையொன்றைக் காண்க.

| A | B | C | X |
|---|---|---|---|
| 0 | 0 | 0 | 1 |
| 0 | 0 | 1 | 0 |
| 0 | 1 | 0 | 1 |
| 1 | 0 | 0 | 1 |
| 1 | 1 | 0 | 1 |
| 1 | 0 | 1 | 0 |
| 0 | 1 | 1 | 0 |
| 1 | 1 | 1 | 0 |

(ii) பூலியன் அட்சரகணிதத்தில் உள்ள விதிகளைப் பயன்படுத்தி மேற்படி X இன் பூலியன் கோவையைச் சுருக்குக.

(iii) மேலே வினா (ii) இல் பெற்ற பூலியன் கோவைக்குரிய தருக்கச் சுற்றை அமைக்க.

2. (a) தொகுப்பி (compiler) என்பதால் கருதப்படுவது யாதென விளக்குக.

(b) இடத்துரி வலையமைப்புகளுக்கும் (LAN) பெரும் பரப்பு வலையமைப்புகளுக்கும் (WAN) இடையிலான பிரதான வேறுபாடுகளை விவரிக்குக.

(c) புள்ளி அமைவுறு அச்சுப்பொறிக்கும் (dot matrix printer) லேசர் அச்சுப் பொறிக்கும் (laser printer) இடையிலான **மூன்று** வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

(d) கணினியில் வைரசுத் தொற்று ஏற்பட்டுள்ளபோது காணக்கூடிய நோயறிகுறிகள் **நான்கை** விவரிக்குக.

3. (a) (i) X, Y மாறிகளிரண்டின் வகை நிறைவெண்ணாகுமாறு வகையிலும் Z மாறியின் வகை மெய்யாகுமாறும் பாஸ்கல் மாறியை வரையறுக்குக.

(ii) உறுப்பு வகை character இன் A எனும் வரிசையினது (array) மாறியில் பன்னிரண்டாவது கூறுக்கு (component) 'z' எனும் வரியுருவை வழங்குவதற்காக பாஸ்கல் கோவையை எழுதுக.

(b) பின்வரும் ஒவ்வொரு தடமும் செயற்படும் தடவைகளைக் காண்க.

(i)
```
s := - 10;
repeat
    s := s + 5
until s > 30;
```

(ii)
```
x := 20;
y := 4;
while (x>1) do x:=x-y;
```

(c) மெய்யெண்கள் மூன்றை வாசித்து அவற்றுள் மிகப்பெரிய வருவிளைவுக்கான பாஸ்கல் செய்நிரலை எழுதுக.

[பக். 6 ஐப் பார்க்க

4. கீழே தரப்பட்டுள்ள வேலைத்தாள் மூலம் பாடசாலைச் சிற்றுண்டிச்சாலையொன்றில் ஒரு வாரகாலத்துள் நிகழ்ந்த கொடுக்கல் வாங்கல்கள் காட்டப்பட்டுள்ளன.

| | A | B | C | D | E | F | G | H | I | J | K | L | M |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Item | Buying Price per unit (Rs.) | Selling Price per unit (Rs.) | Number of Items sold | Income (Rs.) | Profit (Rs.) | | | | | | | |
| 2 | Tea Bun | 12 | | 180 | | | | | | | | | |
| 3 | Egg Roll | 16 | | 150 | | | | | | | | | |
| 4 | Pancake | 10 | | 200 | | | | | | | | | |
| 5 | Chocolate Bar | 20 | | 75 | | | | | | | | | |
| 6 | | | | | Total Profit (Rs.) | | | | | | | | |
| 7 | | | | | | | | | | | | | |
| 8 | | | | | | | | | | | | | |
| 9 | | | | | | | | | | | | | |
| 10 | | | | | | | | | | | | | |

(a) விற்பனை செய்யப்பட்ட ரீ பணிஸ் (tea bun) எண்ணிக்கையைக் காட்டும் சிற்றறை முகவரி (cell address) யாது ?

(b) அலகொன்றின் விற்பனை விலையானது அதன் கொள்விலையிலும் 50% கூடுதலாயின் C2 கலத்தில் எழுத வேண்டிய சூத்திரம் யாது ? ((B2/2) + B2)

(c) ஏனைய மூன்று பொருள்களினதும் விற்பனை விலைகளை C3:C5 சிற்றறை வீச்சில் காட்டுவதற்காக மேற்கொள்ள வேண்டிய படிமுறைகளை எழுதிக்காட்டுக.

(d) ரீ பணிஸ்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் காண்பதற்காக E2 சிற்றறையில் எழுத வேண்டிய சூத்திரம் யாது ?


(e) ஏனைய மூன்று பொருள்களின் வருமானத்தை E3:E5 சிற்றறை வீச்சில் காட்டுவதற்காக மேற்கொள்ள வேண்டிய படிமுறைகளை எழுதிக்காட்டுக.

(f) ரீ பணிஸ்களிலிருந்து கிடைத்த இலாபத்தைக் காண்பதற்காக F2 சிற்றறையில் எழுத வேண்டிய சூத்திரம் யாது ?

(g) ஏனைய மூன்று பொருள்களிலும் இலாபத்தை F3:F5 சிற்றறை வீச்சில் காட்டுவதற்காக மேற்கொள்ள வேண்டிய படிமுறைகளை எழுதிக்காட்டுக.

(h) மொத்த இலாபத்தைக் காண்பதற்காக F6 சிற்றறையில் எழுத வேண்டிய சூத்திரம் யாது ?

5. பின்வரும் ஆவணம் சொல்முறை வழியாக்கல் மென்பொருளைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணத்தைக் அவதானித்து அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.




(a) இந்த ஆவணத்தில் A எனக் காட்டப்பட்டுள்ள பாடப் பெட்டியை வடிவமைப்பதற்குத் (formatting of the text box) தேவையான படிமுறைகளை எழுதிக் காட்டுக.

(b) "video conferencing" எனும் சொற்களில் B எனக் காட்டப்பட்டுள்ள தோற்றத்தை (appearance) அமைப்பதற்காக பின்பற்ற வேண்டிய படிமுறைகளை எழுதிக்காட்டுக.

(c) இந்த ஆவணத்தில் C எனக் காட்டப்பட்டுள்ள பாடப் பகுதியை குண்டுக்குறிப் பட்டியலாகத் (bulleted list) தயார்ப்படுத்துவதற்காக மேற்கொள்ள வேண்டிய படிமுறைகளை எழுதிக் காட்டுக.

(d) இந்த ஆவணத்தை அச்சிட முன்னர் அதன் முன்காட்சி (preview) ஒன்றைப் பெறும் விதத்தை விளக்குக.

6. (a) (i) Business Process Re-engineering (BPR) இனது அடிப்படையான **நான்கு** இயல்புகளைக் குறிப்பிடுக.

(ii) நிறுவனமொன்றின் பின்வரும் ஒவ்வொரு முகாமை மட்டத்துக்கும் மிகப் பயனுடைய பிரதான தகவல் முறைமையைச் சுருக்கமாக தருக.

(A) பிரதம நிறைவேற்று அதிகாரி (Chief Executive Officer)

(B) உதவி முகாமையாளர்கள் (Assistant Managers)

(C) கணக்கு முகாமையாளர் (Accounts Manager)

(b) (i) இலங்கை அரசினால் தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்தை இந்நாட்டு மக்களிடையே பிரபல்யப்படுத்துவதற்காகப் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நீங்கள் அறிந்துள்ள அவ்வாறான **மூன்று** நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

(ii) உங்களது கருத்துப்படி தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்தை இலங்கை மக்களிடையே பிரபல்யப் படுத்துவதில் எதிர்நோக்கும் பிரதானமான **இரண்டு** தடைகளைக் குறிப்பிடுக.

* * *